[1975 மார்ச் 14

கிறது ? இதுபோல கணக்கிடப்படாமலேயே பல தொழிற்சாலைகளை ஆரம்பிப்பது அரசாங்கத்தின் நோக்கமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இந்த குளுகோஸ் தொழிற்சாலையைப் பொறுத்தவரை எங்கு மக்காச்சோளம் அதிகமாசுக் கிடைக்கிறதோ அங்கு ஆரம்பிக்கலாம் என்று சொல்கிறார்கள்.

Starch 20,000 tons per annum, glucose 7,000 tons per annum, dextrose 3,600 tons per annum.

என்பதாக மக்காச் சோளத்தைக் கொண்டு இதைச் செய்யலாம் என்ற அடிப்படையில்தான் கோவை மாவட்டத்திலும், புதுக்கோட்டை மாவட்டத்திலும் இதை ஆரம்பிக்க பரிசீலனை நடந்துகொண்டிருக்கிறது.

திரு. சு. துரைசாமி : ஏற்கனவே கோவை மாவட்டத்தில் உடுமலைப் பேட்டையில் நாற்பத்து ஐந்தாயிரம் ஏக்கரா மக்காச்சோளம் விளைகிறது. ஆகவே, அவசியம் கோவை மாவட்டத்தில் இந்தத் தொழிற்சாலையை அமைக்க அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : என் தொகுதி மக்களுக்காகப் பேசியதற்கு நன்றி.

(முற்பகல் 9–30)

திரு. கே. என். குமாரசாமி : சார், இந்தத் தொழிற்சாலைகளை தனியாருக்குக் கொடுப்பதைக் காட்டிலும், அரசாங்கமே அந்தத் தொழிற்சாலையை எடுத்து நடத்துவதற்கான சாத்தியக் கூறுகளை ஆராயுமா ? அதே நேரத்தில் பிற்பட்ட பகுதிகளில் இந்தத் தொழிற்சாலைகளை நிறுவுவதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஏற்கனவே மத்திய அரசு கமலா சுகர்ஸ் லிமிடெட் என்ற தனியார் நிறுவனத்திற்கு உடுமலைப் பேட்டையில் குளுகோஸ் தயாரிக்க அனுமதி கொடுத்தது 1953-ல். பிறகு ஜெய்பூர் சுகர்ஸ் கம்பெனி என்ற தனியார் நிறுவனத்திற்கு 1973-ல் மத்திய அரசு அனுமதி கொடுத்து இருக்கிறது. இப்போது மத்திய சர்க்கார் அனுமதி கொடுத்து இருப்பது சென்னையைச் சேர்ந்த ஒரு தனி நபருக்குத்தான். அதை எடுத்து தமிழ் நாடு அக்ரோ இண்டஸ்டிரீஸ் கார்ப்பரேஷன் அனுமதி வாங்கியிருக்கிறது.

குடிநீர் வழங்கு திட்டங்கள்.

*317 வினா —திரு. த. சோணையா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டம், மானமதுரை ஊராட்சி ஒன்றியம், சின்னக்கண்ணனூருக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டம் ஏதேனும் ஆய்விலுள்ளதா ?

1975 மார்ச் 14]

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : ஆம்.

திரு. த. சோணையா : தலைவரவர்களே, மானாமதுரை ஒன்றியம் சின்னக்கண்ணனூர் என்ற கிராமம் ஒரு போக்குவரத்து இல்லாத, குடிக்க தண்ணீர் இல்லாத சிரமமான நிலையில் உள்ள கிராமம் ஆகும். ஆகவே, அந்தப் பகுதி மக்களுக்கு, வறட்சியான நிலையில் உள்ள தற்போது, உடனடியாக பாதுகாக்கப்பட்ட குடிநீர் திட்டம் ஏற்படுத்திக்கொடுக்க அரசு உத்தரவு பிறப்பிக்குமா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : முதலிலேயே ஆமாம் என்று சொல்லிவிட்டேன். ரூ. 1,13,500 அளவுக்கு திட்டமிடப்பட்டு இருக்கிறது. விரைவில் அந்த வேலை துவங்கப்படும்.

* 318 வினா—திரு. டி. வி. சம்பத் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தரங்கம்பாடி பேரூராட்சி மன்ற பகுதி வாழ் மக்களுக்கு குடி தண்ணீர் வழங்கும் திட்டம் அரசு பரிசிலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்பொழுது வேலை துவங்கும் ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : (அ) & (இ) : தரங்கம்பாடி குடிநீர்த் திட்டத்திற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ. 16·58 இலட்சத்திற்கும் ஆண்டு பராமரிப்புத் தொகை ரூ. 44,000-க்கும் உள்ள வாறு ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் பரிசிலனையில் உள்ளது.

திரு. டி. வி. சம்பத் : தலைவரவர்களே, தரங்கம்பாடியைப் பொறுத்த வரையில், அங்கு வாழும் மக்கள் மீனவர்கள். ஆண்டு ஒன்றுக்கு ரூ. 44,000 அந்த ஒன்றியம் செலவு செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். அங்கு வாழும் மக்கள் மீனவர்களாக இருப்பதாலும், தாழ்த்தப் பட்ட மக்களாக இருக்கிற அது வருமானம் இல்லாத காரணத்தாலும் ஊராட்சியாக இருப்பதால், அந்த தொகையை அரசே ஈடு செய்ய முன்வருமா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : அதற்குத்தான் என்ன செய்வது என்று பரிசீலித்துக்கொண்டு வருகிறார்கள். 5,000 மக்களுக்கு மேல் உள்ள நகரப் பஞ்சாயத்துக்கள் அதற்கான பணத்தை செலவிடவேண்டும். சர்க்காரே முழுமையாக ஏற்றுக்கொள்ள முடியாது. காரணம், நாம் அந்த மாதிரியான திட்டங்களுக்காக எல்.ஐ.சி.யிடமிருந்து கடன் வாங்கி செலவு செய்து கொண்டிருக்கிறோம். அந்த ரூ. 44,000-ஐ